முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:-செல்வி.எஸ்.பத்மாவதி .ML.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28-ம் நாள் செவ்வாய்கிழமை

இ.ம.எண்.237/2025 இன் அ.வ.எண்.165/2004

1. ஶ்ரீராமன்
2. புவனகிரி வர்த்தகர் சங்கம், புவனகிரி .... மனுதாரர்கள் / 1 மற்றும் 11 பிரதிவாதிகள்

/எதிர்/

புவனகிரி வர்த்தகர் சங்கம் அதன்
செயலாளர் A.C.P. ரத்தினசுப்ரமணியன் .... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 25.10.2025 அன்று என் முன்னர் இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.E.ஜெயராமன் அவர்கள் அஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. N.ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைகுட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

## உத்தரவு

மனு உரிமையியல் நடைமுறைசட்டம், 1908 உத்தரவு 8 விதி 1A(3) ன் கீழ் நீதிமன்றத்தில் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-

எதிர்மனுதாரர் தன் பேரிலும் மற்ற பிரதிவாதிகள் பேரிலும் தாவா சொத்து சுவாதீனத்திற்கு தாக்கல் செய்து, அதில் எதிர் வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறதாகவும், வாதி தரப்பு விசாரணை முடித்து தனது தரப்பு விசாரணைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும், தனது தரப்பில் சில ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், அவைகளை விசாரணை காலத்தில் தாக்கல் செய்யலாம் என்று கருதியதனால் முன்னதாக தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இல்லை என்றும் , தான் வழக்கில் 1 மற்றும் 11 வது பிரதிவாதியாவேன் என்றும், அதில் சாட்சியம் அளிக்க வேண்டி உள்ளதாகவும், ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு மேல் உத்தரவு செய்ய வேண்டியும், இல்லாவிடில் வீண் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், மனுவில் கண்டுள்ள ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு அனுமதிக்க வேண்டி குறிப்பிடப்பட்டுள்ளது.

3. 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய் என்றும், ஏற்புடையது அல்ல என்றும், ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுவில் காஸ்டைட்டில் சரியாக எழுதவில்லை என்றும், 11ம்

பிரதிவாதிக்காகவும் 1ம் பிரதிவாதி சேர்த்து 1 ஆம் பிரதிவாதி வழக்கு நடத்துவதாகவும் அவருக்காவும் சேர்த்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்று மனுதாரர் தன் அபிடவிட்டில் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றும், அதனால் 11 பிரதிவாதிக்காவும் சேர்த்து இம்மனு ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் உண்மையானவை அல்ல என்றும், இவ்வழக்கு சம்மந்தமில்லாதவை என்றும், ஆவணங்கள் வழக்கிற்காக மனுதாரரால் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள், உண்மையானவை அல்ல என்றும், மனுதாரர் ஆவணங்களை பற்றியும் ஆவணங்களின் உண்மை தன்மை பற்றியும் தன் மனுவில் விளக்கமாக கூறவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர் தாக்கல் செய்துள்ள சில ஆவணங்கள் கெஜராக்ஸ் நகல் என்ன ஆவணம் என்று தெளிவாக இல்லை என்றும், 1வது ஆவணம் 1 page மட்டும் நகல் வழங்கப்பட்டுள்ளதாகவும், முழு ஆவணங்கள் நகல் வழங்கப்படவில்லை என்றும், சில ஆவணங்கள் ஜெராக்ஸ் காப்பி தாக்கல் செய்து விட்டு, சான்றிட்ட நகல், அசல் என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆவணம் வரிசை எண்,3, 6, 9 10, 11, 12, 15, 16, 19, 20, 22, 24, 28, 32, 33, 34, 36, 42, 43, 44, 46, 51, 55, 56, 57, 58, 60, 61, 62, 69, 71, 72, 74, 77, 80, 85, 86 ஆகிய ஆவணங்கள் ஜெராக்ஸ் காப்பி ஆவணம் என்றும், அவைகள் ஏற்புடையதல்ல என்றும், நீதிமன்ற சான்றிட்ட நகல்கள் என்றும், 104, ஆவணம் தெளிவாக இல்லை என்றும், ஆவண எண் 66 ஜெராக்ஸ் ஆவணத்தோடு கலந்து முதல் பக்கம் இல்லை என்றும், ஆவணம் 39 மற்றும் 91 ஆவணங்கள் ஏற்புடையதல்ல என்றும், உண்மையான ஆவணமும் அல்ல என்றும், அவைகளுக்கு மனுதாரர்

Stamp Duty penalty செலுத்த வேண்டும் என்றும், செலுத்த தவறும் பட்சத்தில் ஆவணம் ஏற்புடையதல்ல என்றும் உண்மையான ஆவணம் அல்ல என்றும், மனுதாரால் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர் ஓ.எஸ்,31/2004 வழக்கிலிருந்து சான்றிட்ட நகல்கள் பெற்று நகல் செய்துள்ளார் என்றும், அவைகள் அசல் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டு அதிலிருந்து சான்றிட்ட நகல் பெறப்பட்டதா அல்லது ஜெராக்ஸ் ஆவணம் தாக்கல் செய்து அதிலிருந்து சான்றிட்ட நகல் பெறப்பட்டதா என்பதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், மேலும் ஓ.எஸ்.31/2004 மற்றும் இந்த வழக்கு ஓ.எஸ்.165/2004 தாக்கல் செய்த joint trial ஆக விசாரணை நடந்து வருவதால் மனுதாரர் ஓ.எஸ்.31/2004 தாக்க்ல செய்த ஆவணங்களை நேரடியாக இவ்வழக்கில் குறியீடு செய்யலாம் என்றும், அதை விடுத்து மனுதாரர் சான்றிட்ட நகல் பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் மனுதாரர் அலட்சியமாக உரிய காலத்திற்குள் சரியான ஆவணங்களை தாக்கல் செய்யாமல் தற்போது பொய்யான அம்சங்களை கூறி வழக்கில் காலத்தை கடத்தி வருகிறார் என்றும் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பப்பட்டது, ஆணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

எதிர்மனுதாரர் தன் பேரில் அசல் வழக்கு தாக்கல் செய்து வழக்கானது தனது

தரப்பு விசாரணையாக வைக்கப்பட்டுள்ளதாகவும், ஆவணங்களை விசாரணை காலத்தில் தாக்கல் செய்யலாம் என்று கருதியதனால் முன்னதாக தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், **மாறாக**, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உண்மையானவை அல்ல , நகல்களை தாக்கல் செய்துள்ளார் என்றும், உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் காலம் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இருப்பதாக ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளததையும் கருத்தில் கொண்டு பரிசீலினை செய்ததில், சட்ட பிரிவின்படியும், receving of document is different from marking of documents என்பதை கருத்தில் கொண்டும், சட்ட பிரிவின்படியும், வழக்கில் மனுதாரருக்கு அசல் வழக்கில் தரப்பினை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பளிக்கும் முகமாகவும், விசாரணையின் போது ஆவணங்களை குறியீடு செய்யும்போது எதிர்தரப்பு ஆட்சேபனை செய்யும் பட்சத்தில் ஆட்சேபனையுடன் ஆவணங்களின் ஏற்புடைய தன்மையை கவனத்தில் கொண்டும் நீதிமனறம் குறியீடு செய்வதால் ஆவணங்களை பெற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரக்கு பாதகம் ஏற்படாது என்பதாலும், நீதியின் நலன் கருதியும் மனுதாரரின் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்றும், இந்த மனுவினை அனுமதிப்பதால் மட்டுமே ஆவணத்தை ஏற்றுக்கொண்டதாக கருத இயலாது என்றும், ஆவணத்தை குறியீடு செய்வது என்பது விசாரணை சமயத்தில் அந்த ஆவணம் இந்த வழக்கிற்கு ஏற்புடையதா? மற்றும் ஆவணத்தின் நம்பகத்தன்மை, உண்மைத்தன்மை மற்றும் ஏற்றுக்கொள்ளும் தன்மை ஆகியவற்றினை பொருத்தே அமையும் என்றும் இந்நீதிமன்றம் பிரச்சனைக்கு நீதியின் நலன் கருதி விடை காண்கிறது.

மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை **subject to admissibility** அனுமதிக்கலாம் என இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**7.** முடிவாக, இம்மனு ஆவணங்களை ஏற்கும் தன்மை பொறுத்து அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

அசல்-நகல்-உத்தரவு
வ.வி.எண்.237/2025
இன்
அ.வ.எண்.165/2004
நாள்.28.10.2025